இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

Press Notice No: HRC/P/i/T/26/09/24

# ஊடக வெளியீடு

## தரம் 5 புலமைபரிசில் பரீட்சை வினாத்தாள் வெளியாகியமை தொடர்பான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை

2024 செப்டெம்பர் மாதம் 26 ம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இவ்வருட தரம் 5 புலமைபரிசில் பரீட்சை வினாத்தாள் வெளியாகிமை பற்றி கிடைக்கபெற்ற முறைப்பாடு தொடர்பான விசாரணை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் திரு. N.G புஞ்சிஹேவா தலைமையில் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரிகள், கல்வி அமைச்சின் அதிகாரிகள், பெற்றோர் மற்றும் வழக்கறிஞர் பங்களிப்புடன் இடம்பெற்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர், இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு குறித்த விடயம் தொடர்பாக குறுகிய கால வரையறையில் வினைத்திறனான தீர்வின் அவசியம் பற்றியும் இதனால் மாணவர்களுக்கு ஏற்படும் உள ரீதியான பாதிப்புக்கள் மற்றும் அவர்களது எதிர்காலம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றியும் வலியுறுத்தினார். மேலும் பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஒரு வார காலப்பகுதியில் உள்ளக ஆய்வுகள் பற்றிய முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தெரியப்படுத்தப்பட்டது. விசாரணையில் பங்கேற்ற அனைத்து தரப்பினரும் தங்கள் கைவசமுள்ள குறித்த ஆவணங்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும், பரீட்சைகள் திணைக்களத்திற்கும் சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் மனித உரிமைகள் ஆணைக்குழு அடுத்த வார தொடக்கத்தில் குற்றவியல் விசாரணை திணைக்களத்துடனும் (CID) இது தொடர்பான விசாரணையை நடாத்தி புலனாய்வின் தீர்மானங்களை மிளாய்வு செய்யவும் தீர்மானித்துள்ளது.

நிஹால் சந்திரசிறி
ஊடக செய்தி தொடர்பாளர்/ பணிப்பாளர் – ஆய்வு மற்றும் கண்காணிப்பு பிரிவு
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

26.09.2024

தொலைபேசி: 011 2505595
மின்னஞ்சல்: rm.director.hrcsl@gmail.com